சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-08

ந.க.எண்.4791/ஆ2/2024, நாள்.23.08.2024

பொருள்: பள்ளிக்கல்வி- சென்னை மாவட்டம்- தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்- புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது (Inspire award) - 2024-2025 ஆம் ஆண்டிற்கு புதிய பதிவுகள் மேற்கொள்ள - கோருதல் - சார்ந்து.

பார்வை:

1. சென்னை-25, தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநரின் கடித எண்.3447/P1/2024, நாள்.28.06.2024 மற்றும் 05.08.2024 .
2. சென்னை -08, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.4791/ஆ2/2024, நாள். 15.07.2024.

.....

பார்வை (2) இல் காண் இவ்வலுவலக செயல்முறைகளின்படி, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் சார்பாக நடத்தப்படும் 2024-2025 ஆம் கல்வியாண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான புதிய பதிவுகள் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களில் ஆர்வமுள்ள மாணவர்களை www.inspireawards-dst.gov.in என்ற இணையதளத்தில் 01.07.2024 முதல் 15.09.2024 வரை பதிவுகள் மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பார்வை (1)இல் காண் கடிதத்தின்படி, 01.08.2024 நிலவரப்படி சென்னை மாவட்டத்தை சேர்ந்த மாணவர்கள் எவரும் பதிவு செய்யவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் சார்ந்து பள்ளித் தலைமையாசிரியர்கள் தனிக்கவனம் செலுத்தி, அறிவியலில் புதியன படைக்க விரும்பும் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை தங்கள் பள்ளியில் பயின்று வரும் மாணவர்களை [ ஒரு வகுப்பிற்கு ஒரு மாணவன் மட்டுமே] www.inspireawards-dst.gov.in என்ற இணையதளத்தில் அவர்கள் பயின்றுவரும் பள்ளிகள் வழியே உரிய பதிவுகள் மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் சமர்ப்பிக்கும் ஆய்வுகளின் தரத்தின் அடிப்படையிலேயே புத்தாக்க அறிவியல் விருதிற்கு தெரிவு செய்யப்பட்டு விருது தொகை வழங்கப்படுவதைக் கருத்திற்கொண்டு தரமுள்ள ஆய்வுகளின் அடிப்படையில் விண்ணப்பித்திடவும் மற்றும்

15.09.2024 வரையே விண்ணப்பிக்க இயலும் என்பதால் உரிய காலக்கெடுவிற்குள் தங்கள் பள்ளி மாணவர்களை இணையவழியில் விண்ணப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்/ முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை

23/8/2024

பெறுநர்

அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள்,
சென்னை மாவட்டம் (உரிய மாவட்ட கல்வி அலுவலர்கள் வாயிலாக)

நகல்

1. சென்னை-25, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. சென்னை-06, பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவர்கள் (இடைநிலை, தனியார் பள்ளிகள் மற்றும் தொடக்கக் கல்வி),
   சென்னை மாவட்டம். ( தங்கள் பள்ளிகளுக்கு மின்னஞ்சல் மூலம் இச்செயல்முறையினை அனுப்பிவைக்க தெரிவிக்கப்படுகிறது.)